**புதுச்சேரி அரசு**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்**

தேதி 30.09.2020

**பத்திரிகைச் செய்தி**

கொரோனா நோய்த் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகமானது, பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக புதுச்சேரியின் பல்வேறு பகுதிகளில் கொரோனா பரிசோதனைகள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுதவிர, கொரோனா வைரஸ் நோய்த்தொற்றிலிருந்து குணமடைந்து வீடுதிரும்பியவர்களைக் கண்காணித்து ஆலோசனை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் ஆகியோரின் அறிவுறுத்தலின்பேரில் சிறப்பான நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக கொரோனா வைரஸ் நோய்த்தொற்றிலிருந்து குணமடைந்து வீடுதிரும்பியவர்களின் நோய் சிக்கல்களைப் புரிந்துகொள்வதற்கும், அவர்களுக்கு உரிய ஆலோசனை வழங்குவதற்கும் ஒரு தனி உதவி தொலைபேசி சேவை 0413-2262547 உருவாக்கப்பட்டுள்ளது.

சிகிச்சைக்குப் பிந்தைய கோவிட்-19 நோயாளிகளுக்கு மருத்துவர்கள் மூலம் உரிய ஆலோசனை வழங்குவதற்காக 24 மணி நேரமும் இந்த தொலைபேசி சேவை செயல்படும். எனவே, சிகிச்சைப் பெற்று திரும்பிய நோயாளிகளை தொற்று ஏற்பட்ட 17வது நாள், 21வது நாள் மற்றும் 28வது நாட்களில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர்களது உடல்நிலை குறித்து கேட்டறிந்து உரிய ஆலோசனைகளை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுமட்டுமன்றி, சிகிச்சைக்குப் பிந்தைய கோவிட்-19 நோயாளிகள், கோவிட் கவனிப்பு மையங்களுக்குச் (COVID Focus Centre) சென்றும் தேவையான ஆலோசனைகளை பெறுவதற்காக ஆலோசகர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அங்கும் அவர்கள் நேரில் சென்று ஆலோசனை பெறலாம்.

...2/-

மேலும், குணமடைந்து திரும்பியவர்கள் தங்கள் பணிபுரியும் இடங்களில் ஏதேனும் மனரீதியான பிரச்சனைகள் ஏற்பட்டால் மேற்கூறிய தொலைபேசி எண்ணிற்குத் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெறலாம் அல்லது கோவிட் கவனிப்பு மையங்களுக்கு நேரில் சென்றும் தகவல் தெரிவிக்கலாம்.

எனவே, சிகிச்சைக்குப் பிந்தைய கோவிட்-19 நோயாளிகள் இந்த சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**Dr. T. அருண், இ.ஆ.ப.,**
அரசுச் செயலர் (சுகாதாரம்) மற்றும்
மாவட்ட ஆட்சியர்